BASEL LANDSCHAFT

KANTONALER KRISENSTAB

**«COVID- 19 பாடசாலைகளில் சோதனை வரிசைக்கிரமம் «பாசல்லான்ட் மானிலத்தில் பரந்த அளவில் சோதனை “**

மேன்மை தங்கிய பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கு,

COVID 19 உங்கள் குழந்தைகளின் பாடசாலைகளில் உமிழ்நீர் சோதனை சம்மந்தமான முக்கிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன. இச் சோதனைகள் வாரந்தோறும் சுயவிருப்பில் இடம்பெறும். ஒரு தடவை கொடுக்கப்பட்ட சம்மதத்தினை எந்நேரமும் காரணம் ஏதுமின்றி வாபஸ் பெற்றுக்கொள்ளலாம். தயவுசெய்து சுகாதாரத்திணைக்களத்தாலும் பாடசாலையாலும் வழங்கப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகளை கடைப்பிடியுங்கள்.

**பரிசோதனை முடிவுகளின் வருகை:**

- கூட்டுப்பரிசோதனை முடிவுகள் வருவதற்கான நாட்களை சரியாக கூறமுடியாது. இவை பரிசோதனைக்கூடங்களின் பணியமுத்தங்களிலும் போக்குவரத்திலும் தங்கியுள்ளது. வழமையாக வகுப்பாசிரியர் 6 தொடக்கம் 10 மணித்தியாலங்களுக்குள் சோதனை முடிவுகளை எதிர்பாாக்கலாம்.
- இப் பரிசோனை முடிவுகளை நீங்கள் பாடசாலையில் இருந்து மின்னஞ்சல் அல்லது தொலைபேசி வாயிலாக பெற்றுக்கொள்வீர்கள்.

**எதிர்மறையான (negativ) கூட்டுச்சோதனை முடிவு (COVID 19 உறுதிசெய்யப்படவில்லை):**

வகுப்பில் COVID 19 உறுதிசெய்யப்படவில்லை. தயவுசெய்து உங்கள் குழந்தையை பாடசாலையின் வழிகாட்டலில் தொடர்ச்சியான பரிசோதனையில் பங்கெடுப்பதற்கு உற்சாகப்படுத்துங்கள்.

**நேர்மறையான (positiv) சோதனை முடிவு (COVID 19 உறுதிசெய்யப்பட்டுள்ளது):**

- பாடசாலைநிர்வாகம் வகுப்புக்களை தொலைத்தொடர்பு வகுப்புக்களாக மாற்றலாம் (பாடசாலை நிர்வாகமே இம்முடிவினை எடுக்கும்).
- வகுப்புமாணவர்கள் முடிந்தளவு விரைவாக கட்டாயமாக PCR Test (உமிழ்நீர் சோதனை) க்கு உட்படுத்தப்படுவார்கள். முத்தன்ஸ் இல் உள்ள சோதனைக்கூடத்திலோ அல்லது வெளிச்சோதனைச் சாவடியிலோ இடம்பெறும்.
- முத்தன்ஸ் இல் உள்ள சோதனைக்கூடம் மற்றும் வெளிச்சோதனைச் சாவடிஆகியவற்றின் திறப்புநேரம் மற்றும் வரும்வழி போன்றவற்றை கீழ்வரும் இணைய முகவரியில் காணலாம். www.bl.ch/massentest
- இப் PCR பரிசோதனையின் பின்னர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்ற விபரங்கள் சோதனையின் இறுதியில் உங்களுக்கு வழங்கப்படும்.
- தனித்தனி முடிவுகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு துரிதசோதனை செய்வது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- சோதனைக்கூடம் மற்றும் வெளிச்சோதனைச் சாவடிஆகியவற்றின் சோதனைக்கான செலவுகளை அரசாங்கம் பொறுப்பேற்கும்.